சுருக்கம்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்க அமைப்பும், செயல்பாடுகளும் – தமிழ் வளர்ச்சிப் பணிக்கென்று நூறு கோடி ரூபாய் சிறப்பு நிதியம் உருவாக்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (குவ 2–2) துறை

அரசாணை (நிலை) எண்.380

நாள் 20.09.2010
திருவள்ளுவராண்டு 2041
புரட்டாசி 4

படிக்க:-

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்களின் 7.7.2010 நாளிட்ட கடிதம்.

==========

ஆணை:

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, கோவை மாநகரில் 2010–ஆம் ஆண்டு ஜுன் 23 முதல் 27 வரை நடைபெற்றது. இம்மாநாட்டின் நிறைவு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்ததன் அடிப்படையில், தமிழ் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்கள் அனுப்பிய கருத்துருவை, அரசு ஆழ்ந்து ஆய்வு செய்து, கீழ்க்கண்டவாறு ஆணைகளை வெளியிடுகிறது :-

## தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கம்:

### அ. அமைப்பும் செயல்பாடுகளும்

(i) தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கம் மதுரையில் அமைக்கப்படும். இச்சங்கத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைவராக இருப்பார்கள்.

(ii) பேரவை:

தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கத்தின் செயற்முறைகளையும், திட்டங்களையும் வகுத்திட 14 உறுப்பினர்களைக் கொண்ட 'பேரவை' ஒன்று பின்வருமாறு அமைக்கப்படும்:-

| | |
|---|---|
| மாண்புமிகு முதலமைச்சர் | தலைவர் |
| தமிழ்நாட்டுத் தமிழறிஞர்கள் | உறுப்பினர், இருவர்(2) |
| பிற மாநிலங்களிலிருந்து தமிழ் அறிஞர்கள் | உறுப்பினர், இருவர்(2) |
| தமிழாய்வு நிறுவனங்கள் சார்பாக | உறுப்பினர், இருவர்(2) |
| வெளிநாட்டுத் தமிழறிஞர்கள் | உறுப்பினர், இருவர்(2) |

| | |
|---|---|
| திராவிட ஆய்வில் ஈடுபட்டு வரும் தமிழரல்லாத வெளிநாட்டு அறிஞர்கள் | உறுப்பினர், ஒருவர்(1) |
| இந்தியத் தமிழ்ச் சங்க அமைப்புகளிலிருந்து | உறுப்பினர், ஒருவர்(1) |
| வெளிநாட்டுத் தமிழ்ச் சங்க அமைப்புகளிலிருந்து | உறுப்பினர், ஒருவர்(1) |
| முனைவர் ம. இராசேந்திரன் (தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணை வேந்தர்) | கௌரவச் செயலாளர் |
| சங்கத்தின் இயக்குநர் (இதற்கென அன்றாடப் பணிகளைக் கவனிக்கும் நிர்வாகக் குழுவின் செயலாளர்) | உறுப்பினர் |

(iii) தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கம் ஒரு தன்னாட்சி நிறுவனமாக இயங்கும்;

(iv) இச்சங்கப் பேரவையின் கௌரவச் செயலாளராக முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் (தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணைவேந்தர்) நியமனம் செய்யப்படுகிறார்;

(v) இரண்டாண்டுகளுக்கு ஒரு முறையேனும் தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கம் கூட வேண்டும். அதற்கிடையில் தேவைப்பட்டால் தொலைத்தொடர்பு இணைப்பு வழியாகக் கூட்டம் நடத்தப் பெறலாம். நிறுவனம் மற்றும் பதவி வழி சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள். எதிர்பாரா நேர்வுகளில் ஏற்படும் வெற்றிடத்தில் அவ்வகைக்குரிய தகுதியானவரைச் சங்கத் தலைவர் தெரிவு செய்யலாம். தொடர்ந்து இரண்டு முறை குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளாதவர்கள் உறுப்பினர் பதவி இழப்பர். அதற்கு விதிவிலக்கு வழங்க தலைவருக்கு உரிமையுண்டு.

<u>(vi) பொறுப்புகள்</u>:

(அ) உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்;

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினைத் தமிழ்நாடு மற்றும் அயல்நாடுகளில் நடத்துவது குறித்தும், அம்மாநாடுகளைக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நடத்துவது குறித்தும், மாநாட்டினை எங்கே, எப்படி நடத்துவது என்பது குறித்தும் சங்கம் அவ்வப்போது கூடி முடிவெடுக்கும்.

(ஆ) தமிழ்மொழி, கலை, பண்பாடு, வாழ்வியல் ஆகியவற்றைத் தொகுத்து நிரந்தரக் கண்காட்சி ஒன்றை அமைத்து நடத்துவது;

(இ) தமிழ்மொழியின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கிய ஆவணக் காப்பகம் ஒன்றை உருவாக்கிப் பராமரித்தல்;

(ஈ) பல்வேறு தனித்தனித் தீவுகளைப் போல தற்போது சிதறுண்டு கிடக்கும் தமிழ் ஆராய்ச்சி அமைப்புகளினிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தல்;

(உ) மொழி ஆராய்ச்சி, மொழித் தொண்டு போன்றவற்றில் தன்னலம் கருதாது செயல்படும் தமிழ் அறிஞர்களைக் கண்டறிந்து உரியமுறையில் ஆதரித்து, அவர்களை தமிழ்மொழி வளர்ச்சிக்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுதல்;

(ஊ) உலகம் முழுவதும் உள்ள தமிழறிஞர்களைப் பற்றிய விவரத்துடன் கையேடு ஒன்று தயாரித்து வெளியிடுதல்; உலக அளவில் உள்ள தமிழ் அமைப்புகளுடன் தொடர்புகளை மேற்கொள்ளுதல்.

ஆ. நிருவாகக் குழு:

(i) தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழி சங்கத்தின் நிருவாகக் குழு பின்வரும் ஏழு உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படும்:-

| | |
|---|---|
| சங்கப் பேரவையின் கௌரவச் செயலாளர் (முனைவர் ம.இராசேந்திரன்) | – தலைவர் |
| பேராசிரியர் (இயக்குநர்) | – செயலாளர் |
| பேரவையிலிருந்து இருவர் | – உறுப்பினர் (2) |
| மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் இருந்து ஒருவர் | – உறுப்பினர் (1) |
| தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலிருந்து ஒருவர் | – உறுப்பினர் (1) |
| செம்மொழி ஆய்வு மையத்தில் இருந்து ஒருவர் | – உறுப்பினர் (1) |

உறுப்பினர்களைச் சங்கப் பேரவைத் தலைவர் (முதல்வர்) நியமனம் செய்வார். உறுப்பினர்கள் அந்தப் பொறுப்பில் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து செயற்படுவர்.

(ii) பணியிடங்கள்

தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழி சங்கத்திற்கு பணியமைப்பு மற்றும் இதர அலுவல்களுக்கு **94** அலுவலர்களை நியமிக்கவும், அதற்கான ஆண்டொன்றுக்கு ரூ.**5.50** கோடியும் கோரிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களின் கருத்துருவில், தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழி சங்கம் அமைத்து முழு அளவில் செயல்பட சிறிது காலம் தேவைப்படுமென்பதால், தற்போதைய தேவையைக் கருத்தில் கொண்டு முதற்கட்டமாக தொல்காப்பியர் உலகத் தமிழ் செம்மொழிச் சங்கத்தின் அன்றாடப் பணிகளைக் கவனிக்கும் பணியமைப்பிற்காக, பின்வரும் எட்டு பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன:-

| | |
|---|---|
| பேராசிரியர் | ஒருவர் (நிருவாகக் குழுவின் இயக்குநர் |
| உதவிப் பேராசிரியர் | இருவர் |
| ஆய்வு மாணாக்கர் | இருவர் |
| உதவியாளர் | ஒருவர் |
| தட்டச்சர் | ஒருவர் |
| அலுவலக உதவியாளர் | ஒருவர் |

## 2. சிறப்பு நிதியம்:

i) உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கென்று தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கத்திற்கு ரூபாய் 100 கோடி (ரூபாய் நூறு கோடி மட்டும்) சிறப்பு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. இது அரசால் தனியாக காப்பு நிதியாக வைக்கப்படும்.

(ii) தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கத்திற்கு ஒப்பளிக்கும் தொகை தனியாக அரசின் காப்பு நிதியாக வரவு வைக்கப்பட வேண்டும். இதற்காக இரண்டு கணக்குகள், அதாவது வட்டி தரக்கூடிய (Interest bearing) மற்றும் வட்டி தரத் தேவையில்லாத (Non Interest bearing) என்கின்ற வகைகளில் தொடங்கப்படும். ரூ.25.00 கோடியை வட்டி தரத் தேவையில்லாத கணக்கிலும், மீதமுள்ள ரூ.75.00 கோடியை வட்டி தரக் கூடிய கணக்கிலும் வரவு வைக்க வேண்டும். மேற்சொன்ன ரூ.25.00 கோடியிலிருந்து தொல்காப்பியர் தமிழ்ச் சங்கத்திற்கு தேவையான கட்டிட மற்றும் அடிப்படைச் செலவுகளுக்காக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மீதமுள்ள ரூ.75.00 கோடியிலிருந்து இச்சங்கம் முதல்வர் அறிவித்துள்ள அனைத்து தமிழ் வளர்ச்சிப் பணிகளைக் செயல்படுத்தப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், வட்டித் தரக்கூடிய தனிக் கணக்கில் இருக்கும் ரூ.75.00 கோடிக்கு ஆண்டு ஒன்றுக்கு சிறப்பினமாக 9 சதவீத வட்டி அரசு வழங்கும்.

## 3. செலவினம்:

(i) சங்கத்தின் பேரவை மற்றும் நிருவாகக் குழுவின் பணிகளுக்காகத் தோற்றுவிக்கப்படும் பணியிடங்களுக்கு ஆண்டொன்றுக்கு ஏற்படும் தொடரும் செலவினமான (ஊதியம் மற்றும் ஆய்வு மாணவர்களுக்கான படிப்பூதியம்) சுமார் ரூ.24.78 இலட்சத்தில், 2010–11–ம் ஆண்டு செலவினத்திற்காக மட்டும் சிறப்பு நிதி ரூ.14,46,000/– (ரூபாய் பதினான்கு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரம் மட்டும்) (7 மாதங்களுக்கு) தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கத்திற்கு விடுவிக்கப்படுகிறது. 2011–12–ம் ஆண்டு முதல் இதற்கான செலவினம் சங்கத்தின் நிதி ஆதாரத்திலிருந்து (வட்டி) மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) தமிழ்நாட்டிலும் மற்றும் வெளிநாடுகளிலும் மாநாடுகள் நடத்த, செலவினத்திற்கு மாநாடுகள் நடத்தப்படும்போது உள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ப சங்கமே அதன் நிதி ஆதாரத்திலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

**4.** மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.100,00,00,000/– (ரூபாய் நூறு கோடி மட்டும்) கோரிக்கை எண்.46–02–ன் கீழ் புதிதாக துவக்கப்பெற்ற கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> “2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 102. இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும், இலக்கிய மேம்பாடும் – I திட்டத்தில் சேராதது – AG. தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கத்திற்கு மானியங்கள்”
> – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை
> (து.தொ.கு. 2202 05 102 AG 0938)

பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட நடப்பு ஆண்டிற்கான செலவினம்:- ரூ.14,46,000/–

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 102. இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும், இலக்கிய மேம்பாடும் – I திட்டத்தில் சேராதது – AG. தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கத்திற்கு மானியங்கள்"
– 09 உதவித்தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை
(து.தொ.கு. 2202 05 102 AG 0910)

**5.** மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.100,00,00,000/– (ரூபாய் நூறு கோடி மட்டும்)–லிருந்து வைப்பீடு செய்ய மாற்றம் செய்யப்படும் ரூ.75,00,00,000/– (ரூபாய் எழுபத்து ஐந்து கோடி மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"K. வைப்பீடுகள், முன்பணங்கள் (a) வட்டிப் பெறும் வைப்பீடுகள் – 8342.00 ஏனைய வைப்பீடுகள் – 120. பல்வகை வைப்பீடுகள் – FC. தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கத்திடமிருந்து பெறப்படும் வைப்பீடு
(து.தொ.கு. 8342 – 00 – 102 – FC – 00 OC) வரவுகள்
(து.தொ.கு. 8342 – 00 – 102 – FC – 00 08) செலவுகள்"

**6.** மேற்கூறியவாறு வைப்பீடு செய்யப்பட்ட ரூ.75.00 கோடி தொகை மீது பெறப்படும் வட்டி (ஆண்டுக்கு 9 சதவீதம்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2049 வட்டி கொடுத்தல் – 60 ஏனைய பொறுப்புகள் குறித்த வட்டி – 701 பல்வகை – AI – தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கத்திடமிருந்து பெறப்படும் வைப்பீடு மீதான வட்டி – 25 வட்டி"
(து.தொ.கு. 2049 – 60 – 701 – AI - 2503)

**7.** மேலே பத்தி 4–இல் துவக்கப்பெற்ற புதிய கணக்குத் தலைப்புகளுக்கு இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

**8.** மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புது துணைப் பணித் திட்டம் குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது.–I)த் துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு–செலவு பொது.–I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–11–ம் ஆண்டிற்கான துனை மதிப்பீடுகளில்

சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வரவு–செலவு பொது.–I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

**9.** இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.1688/FS (P)/2010, நாள் 20.9.2010-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.943 (தொள்ளாயிரத்து நாற்பத்து மூன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா. சிவகுமார்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
துணை வேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 010
அரசு செயலாளர், நிதித் துறை,/ பொதுப்பணித்துறை/
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை / வருவாய்த் துறை, சென்னை – 9
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை – 8
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை–108
பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 010
மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாவட்டம்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 9.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
மாவட்ட கருவூல அலுவலர், மதுரை.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை– 9/18
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 9
மாண்புமிகு நிதியமைச்சர் அலுவலகம், சென்னை– 9
அனைத்து துறைச் செயலாளர்கள், சென்னை– 9
தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைக் கட்டுப்பாட்டிலுள்ள
அனைத்து துறைத் தலைவர்கள்
நிதி (தவ,அநி(ம) துறை, /வசெபொ.I/ வசெபொ II /வசெஒ) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி
இணையதளம்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.